
# விநாயகர்

## அகவல்



இந்துப் பண்பாட்டு நிதியம்,

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

ஔவை பிராட்டியார் அருளியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : விநாயகர் அகவல்

ஓவியம் : பத்மவாசன்


முதற்பதிப்பு : 2020

வெளியீடு : இந்துப் பண்பாட்டு நிதியம்
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

அச்சு : தேவி அச்சகம்
இல. 41, பிறாஸ் பவுண்டர் தெரு
கொழும்பு - 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஸ்ரீ பெரியானைக் கணபதி, திருக்கோவிலூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவலைப் பாடுவோம்.
# அகம் மகிழ்ந்து வாழ்வோம்!

இந்த அற்புதமான மந்திர சக்தி நிறைந்த விநாயகர் அகவலை செந்தமிழ்ப் பாட்டியாம் ஔவைப் பிராட்டியார் பாடி அருளினார். தினந்தோறும் பிள்ளையாருக்கு ஆற அமரப் பூஜை செய்து, பல வகைப் பட்சணங்களை நிவேதனம் பண்ணி, பூஜை முடிந்ததும் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கி மகிழ்வது ஔவைப் பாட்டிக்கு வாடிக்கை. ஒருநாள் நறுமண மலர்களைப் பறித்துத் தட்டுகளில் அடுக்கி வைத்து, அறுகம் புற்களைக் கிள்ளிக் கிள்ளி வைத்துக் கோலம்போட்டு, பூஜை செய்ய ஆரம்பித்தார். அப்போது வானத்தில் வெள்ளை நிற யானையும் குதிரையும் போவது ஓரக் கண்ணிற் தெரிந்தது. யாராய் இருக்கும் என்று மனதில் நினைத்தாரோ இல்லையோ? "ஔவையே பூஜை செய்வதை மட்டும் பார்!" - என்றார் பிள்ளையார்.

அதே நேரம் மேலிருந்து ஒரு குரல் கேட்டது, "ஔவையே! நாங்கள் கைலாயம் செல்கிறோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயும் வருகிறாயா?" "யாரது?" கண்கள் மேற் கையை வைத்துப் பார்த்தபடி கேட்டார்.

'நான்தான் சுந்தரன். இது சேரமான்பெருமான்.' - என்று பதில் வர, 'இதோ! சற்றுப் பொறுங்கள். பூஜையை முடித்துவிட்டு வருகிறேன்' என்றார்.

வேகமாகப் பூஜை செய்ய ஆரம்பித்தார். இதைப் பார்த்த பிள்ளையாரும் 'அம்மையே! ஔவையே! எதற்கு அவசரம்! வழக்கம்போல் ஆற அமரப் பூஜை செய்! அவர்களுக்கு முன் உன்னை நான் அனுப்பி வைக்கிறேன். கவலைப் படாதே! செந்தமிழில் ஏதாவது பாடியபடி பூஜையை செய் தாயே!' என்றார். அளவில்லாத ஆனந்தம் கொண்ட ஔவையும் 'சீதக்களபச் செந்தாமரைப் பூம்பாதச் சிலம்பு...' என்று ஆரம்பிக்கும் அகவலைப் பாடி, நிவேதனம் படைத்து, பிரசாதம் வழங்கி முடித்து விநாயகப் பெருமானை வீழ்ந்து வணங்கி நிமிர்ந்தார். பிள்ளையாரும் தும்பிக்கையை நீட்டினார்; வளைத்தார்; பிடித்தார்; தூக்கினார்; கைலாயத்தில் விட்டார்.

அம்மையும் அப்பனும் "அம்மையே வருக!" என்றனர் வீழ்ந்து வணங்கி, பரமசிவன் பாதத்தின் அருகில் வீழ்ந்து வணங்கி அமர்ந்தபோது... சுந்தரரும் சேரமான் பெருமானும் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தார்கள். ஆச்சரியம் தாங்காமல், "ஔவைப் பாட்டியே! தாங்களா? எப்படி வந்தீர்கள்!" என்று கண் விரித்துக் கேட்டார்கள்.

உடனே ஔவையும்

*மதுர மொழிநல் லுமையாள் புதல்வன் மலர்ப்பதத்தை*
*முதிர நினையவல் லார்க்கரி தோமுகில் போன்முழங்கி*
*அதிர நடந்திடும் யானையுந் தேரு மதன்பின்வருங்*
*குதிரையுங் காதங் கிழவியுங் காதங் குலமன்னரே*

என்று பாடலாற் பதில் சொன்னார். கணபதியைப் பூஜை செய்து பணிந்தால், கைமேற் பலன் கிடைக்கும் என்பதை உணர்த்தினார்.

இப்படி ஔவையைத் தூக்கிக் கயிலையில் வைத்த விநாயகர் தமிழ் நாட்டில் அட்டவீரட்டத் தலங்களில் ஒன்றான திருக்கோவிலூரில் இருக்கிறார். விஸ்வரூபம் எடுத்து அருளியதால் இவருக்குப் 'பெரியானைக் கணபதி' என்று பெயர். இன்றும் இவரை மனமுருகப் பிரார்த்தனை செய்வோருக்கு வேண்டும் வரத்தை அருள் பாலித்தபடி இருக்கிறார்.

பெரியானைக் கணபதியை நினைத்து மனமுருகி அகவலைப் பாடுவோம். அகம் மகிழ்ந்து வாழ்வோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பல்லிசை பாட
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப் 4

பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும் 8

நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழ்ஒளி மார்பும் 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர்ச்சியும் நறுமணமும் உடைய செந்தாமரைப் பூவின் நிறத்தையுடைய பாதங்களில் அணிந்துள்ள சிலம்பு பலவிதமான இசை ஒலிகளை எழுப்ப, இடுப்பினிலே பொன்னாலான அரைஞாண் கயிறும் அழகிய வெண்பட்டு ஆடையும் அழகிற்கு மேலும் அழகேற்ற, பெரிய பேழை போன்ற வயிறும் பெரிய உறுதியான தந்தமும் யானை முகமும் நெற்றியில் ஒளிவீசும் குங்குமப் பொட்டும் ஐந்து கைகளும் அவற்றில் இரண்டில் அங்குசம், பாசம் ஆகிய ஆயுதங்களும் மிகப் பெரிய வாயும், நான்கு பருத்த புயங்களும், மூன்று கண்களும் மூன்று மதங்களின் கசிவினால் உண்டான சுவடு போன்ற அடையாளங்களும் இரண்டு காதுகளும் ஒளிவீசுகின்ற பொன்கிரீடமும் மூன்று நூல்கள் சேர்த்துத் திரித்துச் செய்யப்பட்ட முப்புரி நூல், அலங்கரிக்கும் அழகிய ஒளிவீசுகின்ற மார்பும்.. உடையவரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்

தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம் இதுபொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்களால் விபரிக்க முடியாத துரியம் எனப்படும் நிலையில் உண்மையான ஞானமானவனே, மா, பலா, வாழை ஆகிய மூன்று பழங்களையும் விரும்பி உண்பவரே, மூஞ்சூறினை வாகனமாகக் கொண்டவரே, இந்தக்கணமே என்னை ஏற்றுக்கொள்ள வேண்டி, தாயைப்போல் தானாக வந்து எனக்கு அருள் புரிபவரே, மாயமான இந்தப் பிறவிக்குக் காரணமான அறியாமையை அறுத்து எறிபவரே, திருத்தமானதும் முதன்மையானதும் ஐந்து எழுத்துகளின் ஒலிகளின் சேர்க்கையினால் ஆனதுமான பஞ்சாட்சர மந்திரத்தின் பொருளைத் தெளிவாக விளங்க என்னுடைய உள்ளத்திற் புகுந்து, குரு வடிவெடுத்து மிக மேன்மையான தீட்சை முறையான திருவடித் தீட்சை மூலம் இந்தப் பூமியில் உண்மையான, நிலையான பொருள் எது? என்று உணர்த்தி, துன்பமில்லாமல் என்றும் இன்பத்துடன் இருக்கும் வழியை மகிழ்ச்சியுடன் எனக்கு அருள் செய்து, கோடாயுதத்தால் என்னுடைய பாவ வினைகளை அகற்றி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக் 28

கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே 32

ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே 36



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியாய் உபதேசிக்கக் கூடாத உபதேசத்தை எனது காதுகளில் உபதேசித்து, எவ்வளவு அனுபவித்தாலும் திகட்டாத ஞானத்தைத் தெளிவாய் எனக்குக் காட்டி, தங்கள் இனிய கருணையினால் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து பொறிகளினால் ஆன செயல்களை அடக்குகின்ற வழியினை இனிதாக எனக்கு அருளி, மேலே சொன்ன ஐந்து பொறிகளும் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து, நல்வினை தீவினை என்ற இரண்டு வினைகளையும் நீக்கி அதனால் ஏற்பட்ட மாய இருளை நீக்கி, சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்ற நான்கு தலங்களையும் எனக்கு தந்து, ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களினால் ஏற்படக்கூடிய மயக்கத்தை அறுத்து, உடலில் இருக்கும் ஒன்பது துவாரங்களையும் ஐந்து புலன்களையும் ஒரே மந்திரத்தால் அடைக்கும் வழியினைக் காட்டி, மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களில் நிலை நிறுத்தி அதன் பயனாக பேச்சில்லா மோன நிலையை அளித்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைபிங், கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே

அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடகலை, பிங்கலை எனப்படும் இடது, வலது பக்க நாடிகளின் மூலம் உள்ளிழுக்கப்படும் காற்றானது நடு நாடியான சுளிமுனை வழியே கபாலத்தையடையும் மந்திர மார்க்கத்தைக் காட்டி, அக்னி, சூரியன், சந்திரன் ஆகிய மூன்று மண்டலங்களின் தூண் போன்ற சுழுமுனையின் மூலம் நான்றெளி பாம்பான குண்டலனி சக்தியை எழுப்பி, அதனில் ஒலிக்கும் பேசா மந்திரமான அசபை மந்திரத்தை வெளிப்படையாகச் சொல்லி, மூலாதாரத்தில் மூண்டு எளிக்கூடிய அக்னியை மூச்சுக்காற்றினால் எழுப்பும் முறையை தெரி வித்து, குண்டலினி சக்தி உச்சியிலுள்ள சகஸ்ரதள சக்கரத்தை அடையும் போது உருவாகும் அமிர்தத்தின் நிலையையும் சூரிய நாடி, சந்திர நாடி ஆகியவற்றின் இயக்கத்தையும் குணத்தையும் கூறி, இடையிலிருக்கும் சக்கரமான விசுத்தி சக்கரத்தின் பதினாறு இதழ்களின் நிலையையும் உடலில் உள்ள எல்லா சக்கரங்களினதும் அமைப்புகளையும் காட்டி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாக இனிதெனக்(கு) அருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்

கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கு அருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து

வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கும் ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்(து) அழுத்திஎன் செவியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவமான தூலமும் அருவமான
சூட்சுமமும் எனக்கு எளிதிற் புரியும்படி அருளி,
மூலாதாரம் முதல் சகஸ்ரதளம் வரையிலான
எட்டு நிலைகளையும் எனக்குத் தெரிசனப்படுத்தி
அதன் மூலம் உடலின் எட்டுத் தன்மைகளையும்
புலப்படுத்தி கபால வாயிலை எனக்கு காட்டித் தந்து,
சித்தி முத்திகளை இனிதாக எனக்கு அருளி, நான்
யார் என்பதை எனக்கு அறிவித்து, பூர்வ ஜென்ம
கன்ம வினையை அகற்றி, சொல்லும் மனமும்
இல்லாத பக்குவத்தை எனக்குத் தந்து அதன்
மூலம் எண்ணங்களைத் தெளிவாக்கி, இருளும்
ஒளியும் இரண்டிற்கும் ஒன்றே அடிப்படையானது
என்பதை உணர்த்தி, அருள் நிறைந்த
ஆனந்தத்தை என் காதுகளில் அழுத்தமாகக் கூறி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி 64

அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்(கு) அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி 68

அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக! விரைகழல் சரணே. 72



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவில்லாத ஆனந்தத்தை தந்து, துன்பங்கள் எல்லாவற்றையும் அகற்றி, அருள் வழி எது எனக்காட்டி, சத்சித் அதாவது உள்ளும் புறமும் சிவனைக் காட்டி, சிறியனவற்றிற்கெல்லாம் சிறியது பெரியனவற்றிற்கு எல்லாம் பெரியது எதுவோ அதைக் கணுமுற்றி நின்ற கரும்பு போல என் உள்ளேயே காட்டி, சிவவேடமும் திருநீறும் விளங்கும் நிலையிலுள்ள உண்மையான தொண்டர்களுடன் என்னையும் சேர்த்து, அஞ்சு எழுத்தின் உண்மையான பொருளை எனது நெஞ்சிலே அறிவித்து, உண்மை நிலையை எனக்குத் தந்து என்னை ஆட்கொண்ட ஞான வடிவான விநாயகப் பெருமானே, மணம் கமழும் உமது பாதார விந்தங்கள் சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி

ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே

அறஞ் செய விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்
உடையது விளம்பேல்
ஊக்கமது கைவிடேல்
எண் எழுத்து இகழேல்
ஏற்பது இகழ்ச்சி
ஐயம் இட்டு உண்
ஒப்புரவு ஒழுகு
ஓதுவது ஒழியேல்
ஔவியம் பேசேல்
அஃகம் சுருக்கேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவைப் பிராட்டியார் அருளிய இந்த அரிய தெய்வீகப் பதிகத்தை பாராயணம் செய்வது மிக உன்னதமான பலனைத் தரும். முக்கியமாகப் பெண்கள், குறைந்தபட்சம் வெள்ளிக்கிழமைகளிலாவது படித்துவர நமக்கும் நாட்டிற்கும் நமது சந்ததியினருக்கும் மிகப் பெரிய நன்மைகளைக் கொண்டுவந்து சேர்க்கும்... இது சத்தியம்!



இந்துப் பண்பாட்டு நிதியம்,
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,
இல-248, 1/1 காலி வீதி, கொழும்பு -04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org